**சுருக்கம்**

வேலைவாய்ப்பு அலுவலக நடைமுறைகள் – 2006, 2007, 2008–ஆம் ஆண்டுகளில் பதிவு புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு மீண்டும் ஒருமுறை புதுப்பித்தல் சலுகையும், 2009–ஆம் ஆண்டு புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு சிறப்பு புதுப்பித்தல் சலுகையும் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (டி2) துறை**

**அரசாணை (டி) எண்.401** நாள்:05.07.2010.

திருவள்ளுவர் ஆண்டு 2041, ஆனி 21.

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.78, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 2.5.07.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 6.5.08.
3. அரசாணை (டி) எண்.478, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 24.8.09.

**இதையும் படிக்க:**

4. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரின் கடிதம் எண்.பப1/7216/10, நாள் 01.03.2010 மற்றும் நாள் 10.05.2010.

-----

**ஆணை :**

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர், மேலே 4–ல் படிக்கப்பட்ட கடிதங்களில் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினை 2006, 2007, 2008–ஆம் ஆண்டுகளில் பதிவு புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு மீண்டும் ஒருமுறை புதுப்பித்தல் சலுகையும், 2009–ஆம் ஆண்டு புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு சிறப்புப் புதுப்பித்தல் சலுகையும் வழங்க ஒரு கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார். அதனை அரசு பரிசீலனை செய்தது.

2. 30.04.2010 அன்று தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் மானியக் கோரிக்கை 32–ன் மீது விவாதம் நடைபெறும்போது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர், 2010–2011 ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளில் வரிசை எண்.17–ல், "சிறப்பு புதுப்பித்தல் சலுகை" என்ற பொருளில் கீழ்க்கண்டவாறு அறிவித்துள்ளார் :-

"2006, 2007 2008 மற்றும் 2009 ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலக பதிவினைப் பல்வேறு காரணங்களினால் புதுப்பிக்கத் தவறிய பதிவுதாரர்கள் தங்களின் பதிவு மூப்பினை மீளப்பெறவும், அதன் மூலம் வேலைவாய்ப்பினைப் பெற்றிட உதவிடும் வகையிலும், நடப்பு நிதியாண்டில் சிறப்புப் புதுப்பித்தல் சலுகை வழங்கப்படும். இதனால், சுமார் 1,50,000 பதிவுதாரர்கள் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது".

து.பி.பா.

3. மேற்கண்ட அறிவிப்பின்படி தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பகங்களில் 2006, 2007 மற்றும் 2008-ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு மீள ஒருமுறை சிறப்புப் புதுப்பித்தல் சலுகையுடன், 2009-ஆம் ஆண்டில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கும் சேர்த்து ஒட்டுமொத்தமான புதுப்பித்தல் சலுகையும் வழங்கி கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பின்பற்றி புதுப்பித்துக் கொள்ளலாம் என அரசு ஆணையிடுகிறது:-

1) இச்சலுகையை பெற விரும்பும் நபர்கள், அரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு உரிய ஆவணங்களுடன் மனுச் செய்ய வேண்டும்.

2) இச்சலுகை ஒரு முறை மட்டும் வழங்கப்படும்.

3) மூன்று மாதங்களுக்குப்பின் பெறப்படும் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

4) 01.01.2006க்கு முன் புதுப்பிக்கத் தவறியவர்களின் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

4. மேலே கண்ட இவ்வாணை பற்றிய விவரங்களை முன்னிலையில் உள்ள இரண்டு தமிழ் நாளிதழ்களில் வெளியிடுவதுடன், அனைத்து வேலை வாய்ப்பு அலுவலகங்களில் உள்ள தகவல் பலகையில் (**Notice Board in Employment Exchanges**) பொது மக்களின் தகவலுக்காக வைக்க அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்குமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

து.பிரபாகர ராவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர், கிண்டி, சென்னை-600032.
தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை - 9.
அனைத்துத் துறைச் செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை - 9.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர், சென்னை - 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் செயலர், சென்னை -9.
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை - 9.
முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை-9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (அநமு-II) துறை, சென்னை-9.
கணினிப் பிரிவு பொறுப்பாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை-9.
அனைத்துப் பிரிவுகள், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை- 9.
தேசிய தகவல் தொடர்பு மையம், சென்னை - 9.
இருப்புக் கோப்பு / சுத்த நகல் கோப்புக்கு / உதிரி நகல்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.